சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No. 139/2016

எ.ம.சா.2

நாள். 17.08.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுஜாகரன் | மதம்: | --- |
| தகப்பனார் /கணவர் பெயர்: | ரவிசங்கர் | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | A.O |
| வட்டம்: | ஈரோடு | வயது: | 33 |

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் 4 ம் எதிர்மனுதாரரான நிறுவனத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 4 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 3 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள விபத்து உண்மை தான். எ.ம.சா.ஆ.1 விபத்து காப்பீடு விபத்து தேதியில் அமலில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் மேற்படி காப்பீட்டை பொறுத்த வரை 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். ஆம்னி கார் ஓட்டுநர் தான் அதிவேகமாகவும், கவன குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 2 சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. நான் பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய இழப்பீட்டை கொடுக்காமல் தப்பிப்பதற்காக உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

Sd/-சுஜாகரன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.